Registered as a Newspaper in Ceylon

விலேசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 7 ம் நாள் லபர் 9 (20-6-64) சனிக்கிழமை இதழ் 132

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# கள்ளச் சந்தையை தடைசெய்ய திட்டம்

## உடன் நடவடிக்கை எடுக்க விசேஷ குழுக்கள்

யாழ்ப்பாணம், சனி

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைக்குரிய உணவுப் பொருட்களையும், துணிவகைகளையும் கட்டுப்பாட்டு விலைகளுக்கு விற்பனை செய்யாது அபரிமிதமான லாபத்துடன் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரிகள்மீதும், பொருட்களை பதுக்கிவைக்கும் வியாபாரிகள்மீதும் உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதற்கு நாடெங்கும் பொறுப்புவாய்ந்தவர்களைக் கொண்ட குழுக்களை நியமிக்க நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க நிதியமைச்சர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுள் இது முதலாவதாக இருக்கும். ஒருமாத காலத்துக்குள் இவ்வித குழுக்கள் அமைக்கப்படுமெனவும், கள்ளச்சந்தையில் விற்பனைசெய்வதை நிரூபித்துவிட்டால் தற்காலிகமாக லைசென்ஸை ரத்துச்செய்யவோ அவர்கள்மீது அபராதம் விதிக்கவோ உரிய அதிகாரங்களுடன் அக்குழுக்கள் இயங்குமெனத் தெரிகின்றது.

இவ்வித குழுக்களை நியமிக்கும்பொறுப்பு டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவிடமும், திரு. பேர்னுட் சொய்ஸாவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் தெரியவருகிறது.

## 'ஸ்ரீ பஸ்களை அனுப்புக'

### யாழ். மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்துக்கு 'ஸ்ரீ' பஸ்களை அனுப்பும்படியும் யாழ்ப்பாணத்துககு 'ஸ்ரீ' பஸ்கள் அனுப்புவதை பிரயாணிகள் சங்கமும் பொதுமக்களும் விரும்புகிருர்களென்றும் கொழும்புக்குச் சென்ற யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராஜா போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது கேட்டுககொண்டதாக அறியப்படுகிறது.

இக்கோரிக்கை பற்றி பிரதமருடன் ஆலோசனை செய்வதாக மந்திரி பதிலளித்து 'ஸ்ரீ' பஸ்களில்லாத நல்ல நிலைமையிலுள்ள பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புமாறு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் உடனடியாக 25 பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது.

—

## சுன்னுகம் பட்டின சபை விஸ்தரிப்பு

நல்லூர், சனி

சுன்னுகம் பட்டின சபை 5-ம் வட்டாரத்துடன் கந்தரோடையின் சேர்க்கப்படாத பகுதி விரைவில் சேர்த்துக்கொள்ளப்படும். 1967-ம் ஆண்டில் நடைபெறும் பட்டினசபையின் இரண்டாவது தேர்தல் வட்டார விஸ்தரிப்பின் பின்னரே நடைபெறும்.

பட்டின சபையின் ஐந்தாம் வட்டாரமான கந்தரோடையில் ஒரு பகுதி பட்டினசபையுடன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. சேர்க்கப்படாத பகுதியையும் சேர்த்து தேர்தல் நடத்தும்படி பட்டின சபை ஸ்தலஸ்தாபன அமைச்சினைக் கேட்டுள்ளது. இதற்கு ஸ்தலஸ்தாபன அமைச்சு அடுத்த தேர்தலுடன் அப்பகுதியையும் சேர்த்து வட்டாரத்தை விஸ்தரிப்பதாக அறிவித்துள்ளது.

## கவியரங்கம், பட்டிமண்டபம் சொற்பொழிவு, கலைநிகழ்ச்சிகள்

### 'கம்பன் விழா' ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக் கம்பன் கழகத்தினர் நடத்தும் கம்பன் விழா இம் மாதம் 27-ந்திகதி சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். சண்முகநாதனின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும் இவ் விழாவின் காலை நிகழ்ச்சிகளுக்குநீதியரசர் டாக்டர் எச்.டபிள்யு.தம்பையாகியு. ஸி. தலைமைவகிப்பார். டாக்டர் செ. சிவஞானசுந்தரத்தின் வரவேற் புரையைத் தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்தப்பெறும். இதன் பின் 'கம்பன் கவி நயம்' என்னும் பொருள் பற்றி திருமதி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்உரைநிகழ்த்துவார். அடுத்து 'நாவற்குழியூர் நடராஜன்' தலைமையில் கவியரங்கு நடைபெறும். புலவர் மணி ஏ. பெரியதம்பிபிள்ளையின் சொற்பொழிவுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடையும்.

வித்துவான் பொன். முத்துக்குமாரன் தலைமையில் ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகள் திரு. வி. கே. ஆறுமுகம் கோஷ்டியினரின் 'விலுப் பாட்டு'டன் ஆரம்பமாகும். 'கம்பன்' நூல் வெளியீட்டுக்குப் பின் பட்டி மண்டபம் நடைபெறும்.

இரவுநிகழ்ச்சிகள்வித்தியாலயத்திறந்தவெளியரங்கில் கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில்நடைபெறும். உரைப்போர், இசைப்போர்என்பனவும் நாடகம், கவிதை நடாகம் ஆகியனவும் இடம்பெறும். கம்பராமாயணச் சித்திரப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு மேயர் தா. ச. துரைராசா பரிசில்களை வழங்குவார்.

—

## கொல்வின் யாழ்ப்பாணம் வருகிறுர்

யாழ்ப்பாணம், சனி

சமசமாஜக் கட்சிக் காரியதரிசி டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா நாளை யாழ்ப்பாணம் வருகிறுர்.

டாக்டர் கொல்வின் இங்கு தமது கட்சிப்பிரமுகர்களைச் சந்தித்து கட்சியைச் சேர்ந்த மந்திரிகளின் திட்டங்களை விளக்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழரசுக் கட்சி செயற்குழு இன்று திருமலையில் கூடுகிறது

நல்லூர், சனி

தமிழசுக்கட்சி வாலிபமுன்னணியின் தீவி நடவடிக்கைகள் கட்சியின் தலைமைபீடத்திலுள்ள சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுளளதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி திருமலையில் இன்று நடைபெறும் கட்சியின் செயற்குழு பரிசீலனை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வாலிபமுன்னணி நிர்வாகிகள் யாழ்ப்பாணத்திற்கு வரும் மந்திரிகளுக்கு கறுப்புக்கொடி காட்டுவதுபற்றி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது. மொழிப்பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று கட்சியினர் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் மந்திரிகள் வருகைகளு கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வதன்மூலம் நிலைமையை மோசமானதாக்கி விடக்கூடாது என்று கட்சியின் சில பிரமுகர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறுர்கள்.

இன்றும் நாளையும் திருமலையில் கட்சியின் செயற்குழு திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் கூடுகிறது. இக்கூட்டத்தில் கூட்டரசாங்கத்தினுல் மொழிப்பிரச்னை தீரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா என்பதுபற்றி பரிசிலனைசெய்யப்படும்.

கட்டாய ஓய்வு உத்தரவுகளை எதிர்த்து எபபோது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்மதும் முடிவுசெய்யப்படும். கட்சியின் புதிய தலைவர் யார் என்பதும் இன்று வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேஸியா

## உச்சிமகாநாடு இன்று நடைபெறும்

டோக்கியோ, ஜூன் 19

போர்னியோவிலிருந்து இந்தோனேஷிய கொர்ல்லாக்கள் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து இன்று மலேஸியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையிலான வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு தொடர்ந்து நடைபெற்றது.

சுமுகமான நிலைமை தோற்றியதைத் தொடர்ந்து நாளை முத்தரப்பு உச்சிமகாநாடு காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகுமென கடைசியாக கிடைத்தச் செய்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது

—

பாரதத்தில்

## செயற்கைக் கிரக தகவல் பயிற்சிநிலையம்

புதுடில்லி, ஜூன் 19

செயற்கைக் கிரகத் தகவல் ஆராய்ச்சிப் பயிற்சி நிலையமொன்றைப் பாரதத்தில் நிறுவுவதற்கு ஐ. நா. விசேஷ நிதி ஸ்தாபனம் உதவியளிக்கவிருக்கிறது. இதற்கென இந்த ஸ்தாபனம் 5 லட்சத்து 82 ஆயிரம் டாலர் ஒதுக்கும்.

—

## பர்மா இந்தியரை ஏற்றிவரும் கப்பல்

புதுடில்லி, ஜூன் 19

பர்மாவிலுள்ள இந்தியரை ஏற்றிவரும் முதலாவது கப்பல் அடுத்த மாத முற்பகுதியில் இந்தியா வந்துசேருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

ஏதோ மந்திரசக்தி மூலம் ஒருபாஷை வளரவோ பரவவோ முடியும் என்று சிலர் நினைப்பதாகத் தோன்றுகிறது. இதைவிட ஆழமான விஷயம் ஒன்று இருக்கிறது. ஒரு பாஷைக் குழுவினர் இன்னொரு பாஷைக் குழுவினருடன் உரசும்போது இவ் விஷயம் விசேஷமாகப் புலப்படுகிறது.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி ௴ 7 ௳ (20-6-64)

## மின்சாரத்துக்கு கடன்உதவி

யாழ்ப்பாணத்தின் மின்சார அபிவிருத்திக்கு இரண்டு லட்சத்து முப்பத்தாறுயிரம் ரூபாய் உடனடியாகக் கடன் கொடுத்து உதவுவதற்கு நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா சம்மதமளித்திருப்பது யாழ்ப்பாண மக்களுக்கு மகிழ்ச்சியும் புதிய நிதிமந்திரி மீதுநம்பிக்கையுமளிப்பதாகும்.

"ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கற. பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கற" என்பது தமிழில் உள்ள ஒரு பழமொழி. இந்த சூத்திரம் நமது மேயருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. டாக்டர் பெரேரா நிதிமந்திரிப் பதவியையேற்றதும் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்து மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றிய சூட்டோடு சூடாக காரியத்தைச் சாதிக்க முனைந்த மேயரின் ராஜதந்திரத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

யாழ்ப்பாண நகரின் மின்சார அபிவிருத்தித் திட்டத்துக்கு கடனுதவி அளிக்குமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை அரசாங்கத்திடம் நீண்ட காலமாகக் கோரிவந்திருக்கிறது. அரசாங்கத்தின் நிதி நிலைமை சரியில்லையென்றும் இப்பெழுது கடன் கொடுக்க வசதியில்லையென்றும் இதற்கு முன்னர் நிதிமந்திரிபதவிவகித்தவர்கள் சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துவந்தனர். தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கையை ஓரளவு பெற்றிருக்கும் டாக்டர் பெரேரா இக்கடன் தொகையை உடனடியாக வழங்குவதற்குச் சம்மதித்ததன்மூலம் தம்மீது தமிழ்பேசும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீணாகாது என்பதை உறுதிப்படுத்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

எது எப்படியாயினும்யாழ்ப்பாண நகரின் மின்சார அபிவிருத்தித் திட்டத்துக்கு கடனுதவி விரைவில் கிடைப்பதையிட்டு நாம் ஆறுதலடையலாம். யாழ்ப்பாண நகரின் தண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு ஏற்கனவே கடனுதவி [illegible]றிருக்கிறோம். இக்கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக [illegible] தண்ணீர்வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியை உயர்த்த வேண்டுமென்ற யோசனை இன்னமும் நீங்கவில்லை. மின்சார அபிவிருத்திக்கு பெறப்படும் கடனையும் நாம் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். அதற்கும் எதுவிதத்திலாவது யாழ்ப்பாண நகர பொதுமக்கள் வரி செலுத்தியேயாகவேண்டும். இலங்கையின் இதர பகுதிகளில் மாநகரசபைகள் வசூலிக்கும் வரி விகிதங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணமக்கள் மாநகரசபைக்குச் செலுத்தும் வரி அதிகம் என்று கூறுவதற்கு இடமில்லை. நகரம் முன்னேற்றமடைந்து இதர பகுதிகளுடன் சமமாகத் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானால் அதற்குப் பொதுமக்கள் தங்கள் பங்கைச் செலுத்தித்தானாகவேண்டும். நகரமும் முன்னேற்றமடையவேண்டும், வாழ்க்கையும் வசதியாக இருக்க வேண்டும். ஆனால் வரி விதிக்கக்கூடாது என்று யாரும் விரும்பமாட்டார்கள்.

மாநகரசபையின் வருமானமும் அரசாங்கத்திடமிருந்து வாங்கும் கடன் தொகையும் சரியான முறையில், நகரின் முன்னேற்றத்திற்காக சிக்கனமாகச் செலவிடப்படவேண்டுமென்பதே மக்களின் அவாவாகும். யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சென்ற சில வருடங்களாக அவப் பெயர் ஒன்று இருந்துவருகிறதென்பதை, கசப்பாக இருந்தாலும் கூறித்தானாகவேண்டும். "ஒரு மேயர் வருவார். அவர் ஒரு திட்டத்தைக் கொண்டுவருவார். அதை நிறைவேற்றுவதற்காகப் பணத்தைச் செலவிடுவார், அவர் பதவியிலிருந்து விலகுவார் அல்லது விலக்கப்படுவார். மற்றொருவர் மேயராவார். முன்னிருந்த மேயர் கொண்டுவந்த திட்டத்தை அழித்துவிட்டு புதிய திட்டம் அமைப்பார். இதற்காக மீண்டும் பணத்தைச் செலவிடுவார். சுருக்கமாகச்சொன்னால் ஒருவர் ஆக்கியதை மற்றவர் அழிப்பார் மற்றவர் ஆக்கியதை வேறொருவர் அழிப்பார்"

இந்த அவப்பெயரை இனியாவது நீக்கியேயாகவேண்டும். நகரின் நலனை மனதிற்கொண்டு எக்காரியத்தைச் செய்யினும் அதைச் சரியான முறையில் திட்டமிட்டு, சபையின் சகல அங்கத்தவர்களுடனும் ஆலோசனைசெய்து அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று அதைச் செய்யவேண்டும். யாழ்ப்பாண நகரில் மின்சார விநியோகம் மோசமான நிலையிலுள்ளதென்பது பகிரங்க இரகசியம். மின்சார அபிவிருத்தித்திட்டத்துக்ெனப் பெறும் கடன் தொகையை சரியானமுறையில் பாரபட்சம்என்ற புகாருக்கு இடம்வைக்காது செலவிட்டு நகரமக்கள் அனைவரினதும் நல மதிப்பை மேயர்பெறவேண்டுமென்பதே நமது விருப்பம்.

# "தமிழ் இங்கு நசுக்கப்பட்டாலும் உலகெங்கும் அது ஒலிக்கிறது"

## அமிர்தலிங்கம் பேச்சு

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை அம்மன் கோயில் 3-ம் திருவிழாவின் போது திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. பேசுகையில், சைவமும் தமிழும் போற்றிப் பாதுகாக்கப்படும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன என்றும் ஆலயத்தின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படும் வழியில் பக்தர்களும் தொண்டர்களும் ஆற்றிவரும் சேவை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும் என்றும் கூறினார்.

"தமிழ் அன்னை தனது அரியாசனத்தை இன்று ஒவ்வோர் சைவ ஆலயங்களிலும் பெற்று வருகின்றாள். நாயன்மார்கள் அருளிய தேவாரங்கள் ஆலயங்களில் ஒலிக்கும் போது பக்திபரவசமாவதை நாம் காண முடிகின்றது. தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் என்று கூறிய நாயனாரின் உள்கருத்தை நாம் அறிவோமானால் உண்மையில் நாம் இன்று எமது நாட்டு தமிழ் பேசும் மக்களின் போக்கைப் பார்த்து வெட்கப்பட வேண்டியவர்களாவோம். மங்கையர்க்கரசியார் சைவம் வாழ தமிழ் வாழ எப்படித்தொண்டு ஆற்றினர் என்பதை அவரது சரிதை மூலம் அறிகின்றோம். நாமும் எமது மொழிவாழ எமது இனம் வாழ இப்படி முயற்சிக்க வேண்டும். எமது நாட்டைச் சேர்ந்த அன்பர் மணிஐயர் கடல்கடந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் சைவத்தையும் தமிழையும் பரப்பி வருவதை நாம் கேட்கும்போது பாராட்டாமல் இருக்க முடியாது. இன்று எமது நாட்டில் தமிழ் நசுக்கப்பட்டாலும் உலகம் பூராவும் கேட்கும் மொழியாகவும்-பரவும் மொழியாகவும் விளங்கி வருவதை நாம் காண முடிகின்றது. கடல்கடந்த நாடுகளில் எமது மொழி போற்றப்பட்டு அதற்குரியஅந்தஸ்து பெற்றுவரும்போது எமது நாட்டிலும் உரிய இடம் அதற்குக் கிடைக்கும் என்பது திண்ணமாகும்." என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார். முத்தமிழ்மணி சி. எஸ். எஸ். மணி ஐயர்மங்கையர்க்கரசி என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்தார்.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் பொருட்காட்சி சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு
01 A 0655 ரூபா 27,600

இரண்டாம் பரிசு
07 N 0126 ரூபா 7,900

மூன்றும் பரிசு
05 A 0250 ரூபா 3,980

தலா ரூ. 500 பெறும் டிக்கட்டுகள்:-

| | | |
|---|---|---|
| 18 E 0733 | 05 X 0539 | 10 B 0926 |
| 14 F 0252 | 14 J 0590 | 03 P 0961 |
| 09 N 0957 | 16 Z 0299 | 02 D 0252 |
| 01 G 0692 | 14 D 0823 | 11 M 0417 |
| 03 Y 0042 | 17 A 0906 | 01 H 0451 |
| 06 K 0210 | 19 R 0217 | 10 L 0296 |
| 16 L 0662 | 15 L 0538 | 19 V 0445 |
| 14 S 0253 | 16 W 0234 | 04 C 0298 |
| 04 N 0038 | 09 L 0105 | 03 S 0593 |
| 14 B 0437 | 12 A 0522 | 04 E 0215 |
| 11 J 0169 | 12 I 0094 | 14 E 0310 |
| 12 W 0209 | 10 B 0909 | 11 F 0825 |
| 10 E 0842 | 02 V 0539 | 13 T 0767 |
| 18 H 0634 | 05 F 0919 | 17 Y 0003 |
| 18 P 0041 | 02 N 0535 | 14 E 0221 |
| 17 U 0169 | 03 A 0468 | 13 R 0919 |
| 08 F 0187 | 01 M 0684 | 14 X 0517 |
| 19 M 0909 | 15 Z 0066 | 20 D 0902 |
| 08 Z 0079 | 19 E 0647 | 05 M 0921 |
| 09 P 0188 | 10 Q 0082 | 14 J 0174 |
| 03 B 0636 | 07 L 0136 | 17 M 0899 |
| 16 W 0887 | 16 N 0698 | 12 B 0165 |
| 10 N 0989 | 11 K 0870 | 15 Z 0717 |
| 02 R 0598 | 14 Q 0249 | 09 R 0074 |
| 12 S 0190 | 04 H 0553 | 14 E 0601 |
| 17 Z 0681 | 13 D 0789 | 20 B 0385 |
| 18 E 0544 | 18 A 0923 | 07 R 0751 |
| 16 A 0797 | 02 R 0779 | 14 T 0953 |
| 12 L 0345 | 19 M 0758 | 05 L 0022 |
| 16 X 0023 | 09 A 0143 | 01 C 0990 |
| 12 W 0272 | 19 V 0808 | 14 B 0289 |
| 12 V 0469 | 18 J 0343 | 04 N 0525 |
| 03 S 0747 | 19 C 0757 | 03 A 0868 |
| 13 W 0314 | | |

தலா ரூ. 250 பெறும் டிக்கட்டுகள்.

| | | |
|---|---|---|
| 01 B 0655 | 01 C 0655 | 01 D 0655 |
| 01 E 0655 | 01 F 0655 | 01 G 0655 |
| 01 H 0655 | 01 I 0653 | 01 J 0655 |
| 01 K 0655 | 01 L 0655 | 01 M 0655 |
| 01 N 0655 | 01 P 0655 | 01 Q 0655 |
| 01 R 0655 | 01 S 0655 | 01 T 0655 |
| 01 U 0655 | 01 V 0655 | 01 W 0655 |
| 01 X 0655 | 01 Y 0655 | 01 Z 0655 |

---

கரவெட்டி, வெள்ளி

கரவெட்டி புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த படகு ஓட்டப்போட்டி சமீபத்தில் கல்லூரி வண. பிதா எம். ஜே. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளுக்கான முதல் பரிசுகளை 'அக்குவெனஸ்' இல்லமும், சிரேஷ்ட பிரிவுக்கான இரண்டாவது இடத்தை 'பொஸ்கோ' இல்லமும், கனிஷ்ட பிரிவுக்கான இரண்டாவது இடத்தை 'சேவியர்' இல்லமும் பெற்றன.

# சேரிகளை சுவீகரிக்க ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உரிமை

## புதிய திட்டம் பற்றி மந்திரி பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான சேரி நிலங்களை ஸ்தலஸ்தாபனங்கள் பொறுப்பேற்க வகைசெய்யும் சட்டமொன்றைக்கொண்டுவர ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா ஆலோசித்துவ்ளார்.

சேரிகளை ஒழிப்பதில் பெரும் கஷ்டமேற்படுவதாக பல ஸ்தலஸ்தாபனங்கள் மந்திரிக்கு புகார் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்தே மந்திரி ஜயசூரியா இம்முடிவுக்கு வந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இது சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன கமிஷனர், மந்திரி ஜயசூரியாவுக்கு எழுதியுள்ள மகஜரொன்றில், நகரசபைகளிலுள்ள ஸ்தலஸ்தாபனங்களுக்கே, இப்பிரச்னை மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்துள்ளதென்றும் காலி, கொழும்பு, கண்டி ஆகிய மாநகரசபைகளை முன்னர் எதிர் நோக்கிய இப்பிரச்னை இப்பொழுது நகரசபைகளை நோக்கியுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

சேரி ஒழிப்பு சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன மந்திரி நடவடிக்கைகள் எடுத்துவருகிறார் என்றும் இதுசம்பந்தமான திட்டங்களை தம்மிடம் சமர்ப்பிக்கும்படி அவர் பல ஸ்தல ஸ்தாபனங்களைக் கேட்டுள்ளார் என்றும் நம்பப்படுகிறது.

சேரி ஒழிப்பு சம்பந்தமாக ஏற்படவிருக்கும் செலவுகள் குறித்து ஆராயும் பொருட்டு மந்திரி நகரதிட்ட அமைப்பாளரைச் சந்திக்கவிருக்கிறாரென்றும் அவரின் கருத்துக்களை மந்திரி அறிவார் எனவும் தெரியவருகிறது.

---

பரந்தன்

## தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்

பரந்தன், வெள்ளி

சில நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவந்த பரந்தன் இரசாயன கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் நேற்று வேலைக்குத் திரும்பினர்.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை எந்தவித தாமதமுமின்றிச் சபை டைரக்டர்களிடமும் மந்திரியிடமும் சமர்ப்பிக்கப்படுமென்று பரந்தன் இரசாயன கூட்டுஸ்தாபன தலைவர் உறுதியளித்திருந்ததைத் தொடர்ந்தே வேலைநிறுத்தத்தை தொழிலாளர்கள் கைவிட்டதாகக் கூறப்படுகிறது.

## கலைப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைத் தமிழரசுக்கட்சி உடுப்பிட்டி மாவட்டசபையின் கலைப்போட்டி நாளை சனிக்கிழமை புலோலி வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பேச்சுப்போட்டி (கீழ்பிரிவு) சங்கீதப்போட்டி முதலியனவற்றிற்கு திரு இ. நவரத்தினமும் மேற்பிரிவு பேச்சுப்போட்டிக்கு திரு. ச பொன்னையாவும் நடனநாடகபோட்டிகளுக்கு திரு. க. ஜெயக்கொடியும் தலைமை வகிப்பர்.

மா. ராதாமணி கோஷ்டியின் கோபிகிருஷ்ண நடனமும், கணேசராசா குழுதவல்லியின் கூட்டுநடனமும் நடைபெறவிருக்கிறது.

கலைப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில் வழங்குவார்.

## இப்படியும் நடந்தது!

கரவெட்டி, வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்த புகையிரதப் பிரயாணி ஒருவரால் இழக்கப்பட்ட பொருட்களின் ஒருபிரதான பகுதியை அவருக்கு பொருளைத் திருடியவர்கள் தபாலில் அனுப்பிவைத்த சம்பவமொன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது.

கரவெட்டி நாரந்தனையைச் சேர்ந்த திரு. யேம்ஸின் மகனான ஞானேந்திரன் சர்வகலாசாலைப் பிரவேசப்பரீட்சை ஒன்றுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புகையிரதத்தில் பிரயாணமானார். இவர் கொழும்பை அடைந்ததும் தாம் கொண்டுவந்த பொருட்களைக் காணாது திகைத்தார். பரீட்சைக்கான பத்திரங்கள் பல அந்தப் பொருட்களுடன் சேர்த்துவைக்கப்பட்டிருந்தன. திகில் அடைந்த மாணவன் இதுவிஷயமாக தனது தந்தைக்கு கடிதம் எழுதியிருந்தார். பரீட்சைக்குரிய பத்திரங்களின் பிரதிகளை எடுத்து உடன் அனுப்புமாறு அவர் அக்கடிதத்தில் கேட்டிருந்தார். ஆனால் தந்தைக்குக் கடிதம் எழுதிய அன்றே சோதனைக்குத்தேவையானதும்காணமற்போனதுமான பத்திரங்களை ஞானேந்திரனின் கொழும்பு விலாசத்திற்குத் திருடியவர்கள் அனுப்பிவைத்திருந்தார்களாம்.

பார்சலைத் திருடியவர்கள் அதில் உள்ள மாம்பழங்களையும், முருங்கைக்காய்களையும் புதிய கால்சட்டைகளையும் எடுத்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக

## பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகலாம்

கண்டி, வெள்ளி

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற இலங்கை பல்கலைக்கழக கலை, சட்ட பிரவேசப்பரீட்சை முடிவுகள் நாளை சனிக்கிழமை மாலை வெளியாகுமெனத் தெரியவருகிறது.

கடந்த வருடத்தைப்போலவே இவ்வருடமும் குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப் படுவார்கள். மொத்தமாக 1,000 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படலாமென்றும் ஆனால் இத்தொகை அதிகரிக்கப்படமாட்டாதென்றும் நம்பப்படுகிறது.

விஞ்ஞானம், எஞ்சினியரிங், வைத்தியம் சம்பந்தப்பட்ட பிரவேச பரீட்சை முடிவுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# '5 மாதத்தில் இனஒதுக்கல் கைவிடவேண்டும்'

## நேருஜிக்கு தமிழ் எழுத்தாளர் அனுதாபம்

சென்னை, ஜூன் 19

மறைந்த மேதை ஜவஹர்லால் நேருவின் மரணம் எழுத்தாளர்களுக்கு பேரிழப்பு. நேருஜி அரசியலில் ஈடுபடாமலிருந்திருந்தால் அவர் எழுத்தாளராகவே வாழ்ந்திருப்பார். அவர் அரசியல் வாதியாக இருந்தும் எழுத்துலகுக்குச் சேவை செய்திருக்கிறார். இவ்வாறு தமிழ் எழுத்தாளர் மன்றம் காலஞ்சென்ற பிரதமர் நேருஜி மறைவு குறித்து நடத்திய அனுதாபக் கூட்டத்தில் துணைச் செயலாளர் பேசும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பிரதமரின் மறைவுக்குப் பல எழுத்தாளர்கள் அனுதாபம் தெரிவித்துப் பேசினார்கள்.

---

## மகேந்திர விருந்து

புதுடில்லி, ஜூன் 19

நேபாள மன்னர் நேற்று நடத்தியவிருந்தில் பிரதமர் சாஸ்திரியும், மந்திரி சபையின் இதர அங்கத்தினர்களும் கலந்துகொண்டனர்.

---

## மிக்கோயன் இந்தியா வருவார்

புதுடில்லி, ஜூன் 19

சோவியத் உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் ஜாகர்த்தா செல்லும் வழியில் நாளை புதுடில்லி வருகிறார். ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் ஜாகர்த்தா புறப்படுவார்.

---

## ஐ. நா.வில் சைப்ரஸ்

நியுயோர்க், ஜூன் 19

சைப்ரஸில் ஐ. நா. படையை 3 மாதம் நீடிக்கவேண்டுமென்ற யுதாண்டின் கோரிக்கை மீது பாதுகாப்பு சபை பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளது.

# தென்னாபிரிக்கா பற்றி ஐ. நா. பாதுகாப்புசபை தீர்மானம்

நியுயோர்க், ஜூன் 19

**வருகிற நவம்பர் மாதத்திற்குள் இனஒதுக்கல் கொள்கையைக் கைவிடுமாறு தென்னாபிரிக்காவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை ஐ நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றியது.**

இதுசம்பந்தமான தீர்மானத்தை நார்வேயும், பொலீவியாவும் கொண்டுவந்தன. பிரிட்டன், அமெரிக்கா உட்பட 8 நாடுகள் சாதகமாக வாக்களித்தன. பிரான்ஸ், ரஷ்யா, செக்கோஸ்லேவேகியா ஆகிய மூன்று நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அடுத்த 5 மாதங்களுக்குள் இனஒதுக்கல் கொள்கையை தென்னாபிரிக்கா கைவிடவேண்டும் என்றும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும், பல்வேறு இனத்தினரின் வருங்கால திட்டத்திற்காக தேசிய மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்னும் தீர்மானம் கேட்டுக்கொண்டது. தென்னாபிரிக்கா இவ்வாறு செய்ய மறுத்தால் இதர நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஐ. நா. குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் எனவும் தீர்மானம் கோரியது

தீர்மானம்போதுமான அளவு கடுமையாக இல்லாதது காரணமாகத் தாம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளமுடியாது என ரஷ்யா அறிவித்தது. பிரிட்டனும் அமெரிக்காவும் தங்கள் வர்த்தக நலன்பாதிக்கபபடும் என்று அஞ்சியே தென்னாபிரிக்காமீது கடுமையாக இல்லை என்றும் ரஷ்யா கூறியது.

தாங்கள் தீர்மானத்திற்குச் சாதகமாக வாக்களித்தாலும் தென்னாபிரிக்கா மீது எவ்வித தடை நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதை ஆதரிக்கவில்லை என ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் கூறின.

---

## சாஸ்திரி வசிக்க மன்னர் மாளிகை

புதுடில்லி, ஜூன் 19

டில்லியிலுள்ள மாஜி சமஸ்தான மன்னர் ஒருவருக்குச் சொந்தமான மாளிகை பிரதமர் வாசஸ்தலமாகும் என்று தெரிகிறது. காரியாலயத்துக்கும், வசிக்கவும் போதிய இடமுள்ள அந்த மாளிகை லண்டனிலிருந்து சாஸ்திரி திரும்புவதற்குள் புதுப்பிக்கப்பட்டுத் தயாராகிவிடும் எனத் தெரிகிறது

## சாந்திவனம் உருவாகும்

புதுடில்லி, ஜூன் 19

நேருஜி தகனம் செய்யப்பட்ட சாந்திகாட், ஸ்ரீமதி இந்திரா காந்தியின் விருப்பப்படி சாந்திவனம் என்று அழைக்கப்படும். அடர்ந்த கானகமாக அதை வளர்க்கவும், மான்களுக்கான வனம் அமைக்கவும் அரசாங்க நிபுணரை கொண்டு திட்டம் தயாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. செந்நிறக் கற்களும், கருங்கற்களும் கொண்டு சமாதி அமைக்கப்படும்.

---

## சாஸ்திரி

புதுடில்லி, ஜூன் 19

டார்ஜீலிங்கிலுள்ள இமாலய மலை ஏறுங்கழகத் தலைவர் பதவியை ஏற்க, பிரதமர் சாஸ்திரி உடன்பட்டிருக்கிறார். திரு. நேரு இப்பதவியை முன்பு வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அண்ணாவின் புகழை மறைக்க முடியாது

காஞ்சிபுரம், ஜூன் 19

காஞ்சிபுரம் நகரசபையில் அண்ணாதுரையின் உருவப்படத்தை முஸ்லிம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் திறந்து வைத்துப் பேசுகையில் அண்ணாதுரையின் புகழை எவராலும் மூடிமறைக்க இயலாது என்றும், அவரது சேவையை எதிர்க்கட்சியினர் கூட மதிக்கத் தொடங்கிவிட்டனர் என்றும் கூறினார்.

---

## ஈ. வே. ரா. காங்கிரசில் சேரத் தயாராம்

திருச்சி, ஜூன் 19

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர் பேசுகையில், தானும் காங்கிரசில் சேரத் தயாராய் இருப்பதாகக் கூறினார்

"ஆனால் என்னுடைய கருத்துக்களை நான் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிப் பழகியவன். இது காங்கிரஸ்காரர்களுக்குப் பிடிக்காது, என்னை உள்ளே விடமாட்டார்கள். ஆகையால் வெளியிலிருந்து கொண்டே காங்கிரஸை ஆதரிப்பேன்" என்றார்.

ஸ்ரீ ஈ. வி. கே. சம்பத் காங்கிரசில் சேரவிருப்பதையும் அவர் வரவேற்றார். "சம்பத் நல்ல பேச்சாளர். காங்கிரசுக்கு அவரால் மிகுந்த பிரயோசனம் இருக்கும்" என்றும் அவர் கூறினார்.

---

## இன்று நடைபெறும் விளையாட்டு போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டிப்பகுதி தமிழ்ப் பாடசாலைகளின் மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி விளையாட்டரங்கில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் மொத்தம் 26 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

# டோக்கியோ வெளிமந்திரிகள் மகாநாட்டில் தடங்கல்

டோக்கியோ, ஜூன் 19

போர்னியோவிலிருந்து இந்தோனேஷிய கொரில்லாக்கள் வாபஸ் பெற்றது பற்றி தகவல் வராததால் நேற்று மாலை மலேஷியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெறவிருந்த வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறவில்லை என அறிவிக்கப்படுகிறது.

காவல்நிலை அமைத்த இடத்திலிருந்து ஒரு இந்தோனேஷிய கொரிலாவாவது வெளியேறினால் தான் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என மலேஷியா உறுதியுடன் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று மலேஷியா எல்லைப் புறத்தில் ஒரு காவல் நிலைதான் அமைக்கப்பட்டதென்றும், இந்தோனேஷியா பக்கத்தில் ஒன்றும் அமைக்கப்படவில்லை என்றும் தகவல் வந்தது.

ஆனால் ஓரிடத்தில் ஆயுதம் தரித்த 32 இந்தோனேஷியர் வெளியேறினர் என ஒரு செய்தி கூறுகிறது.

வடபோர்னியோ பற்றி பிலிப்பைன்ஸின் கோரிக்கை சம்பந்தமாக மலேஷியா பிலிப்பைன்ஸ் மந்திரிகள் பேச்சு நடத்தியதாயும், எவ்வித முடிவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## குவாய்த் தேசியதினம்

புதுடில்லி, ஜூன் 19

குவாய்த்தின் தேசிய தினத்தை முன்னிட்டு அந்நாட்டு அமீருக்கு ஜனதிபதி ராதாகிருஷ்ணன் வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுபபியிருக்கிறார்.

---

## 330 பேர் மாண்டனர்

ராவல்பிண்டி, ஜூன் 19

மேற்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தில் இதுவரை 330 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

# பஞ்சாப் முதல்வர் தேர்தல்

## சாஸ்திரியும், காமராஜரும் முடிவு செய்வார்கள்

புதுடில்லி, ஜூன் 19

திரு. கெய்ரோனுக்குப் பதிலாக, பஞ்சாப் சட்டசபையின் காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஏற்பாடு செய்ய பிரதமர் சாஸ்திரிக்கும், காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜருக்கும் பார்லிமெண்டரி போர்டு அதிகாரமளித்தது.

இந்த இரு தலைவர்களும் புதிய தலைவர் பற்றிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் ராஜ்ய சட்ட சபைக் கட்சிக்கு வழி காட்டுவதா, அல்லது தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை சட்ட சபை அங்கத்தினர்களுக்கே விட்டு விடுவதா என்பதை அவர்கள் முடிவு செய்வார்கள்.

தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு திகதி குறிப்பிடப்படும் வரை சட்டசபைக் கூட்டம் நடத்தப்படக் கூடாது என சாஸ்திரியும், காமராஜரும் பஞ்சாப் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

ஆந்திர பிரதேச சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியை விட்டு விட்டார் என பார்லிமெண்டரி போர்டில் அறிவிக்கப்பட்டது.

---

## ஹிந்தி திணிப்பு இல்லை

சென்னை, ஜூன் 19

கல்வி மந்திரி சக்ளா இரு தினங்களுக்கு முன் சென்னையிலிருந்து டில்லி புறப்பட்டபோது "ஹிந்தி தம்மீது திணிக்கப்படுமென தென்னிந்திய மக்கள் பயப்படவேண்டாம், திணிப்பு என்ற பிரச்னையே இல்லை" என நிருபர்களிடம் கூறினார்.

## மொரார்ஜியை ஆதரித்து ஒரு ஓட்டு

ஆமதாபாத், ஜூன் 19

மொரார்ஜி தேசாயை மந்திரி சபையில் சேர்க்காததன் மூலம் குஜராத்துக்கு அநீதி இழைக்கப் பட்டிருப்பதாகக் கூறும் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை ஆமதாபாத் நகரசபையில் ஒரு சுயேச்சை அங்கத்தினர் கொண்டுவந்தார். பிரேரணையை வாபஸ் பெறுமாறு மேயர் எவ்வளவோ வற்புறுத்தியும் கூட, அதன் மீது ஓட்டெடுக்குமாறு அந்த அங்கத்தினர் வற்புறுத்தினார். ஆனால் பிரேரணைக்கு ஆதரவாக ஒரே ஒருவர் தான் ஓட்டளித்தார்.

---

## சென்னைக்கு காவிரி நீர் சாத்தியமே

சென்னை, ஜூன் 19

அந்தந்த இடத்தில் பூமியின் ஏற்றத் தாழ்வுகளை அனுசரித்து, மேடான இடங்களில் பம்புகள் மூலம் தண்ணீரை மேலே கொண்டுவந்தும், சரிவான இடங்களில் கால்வாய்கள் மூலம் தானாக ஓடச் செய்தும் காவேரியிலிருந்து சென்னைக்கு நீர் கொண்டுவருவது சாத்தியமே என்று நிபுணர்கள் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக ரூ. 17 கோடி திட்டமொன்றை கார்ப்பரேஷன், ராஜ்யஅரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறது.

## கடற்படை நிலையம்

பஞ்சிம், ஜூன் 19

பாரத கடற்படை நிலையம் இங்கிருந்து 27 மைல் தூரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. முதலாவது தளம் கொச்சியில் இருக்கிறது.

---

## இலங்கைச் சிறுவனின் ஓவியங்கள் ஆபிரிக்காவில் காண்பிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

இலங்கைச் சிறுவன் சேனக்கசேன நாயக்காவின் ஓவியங்கள் ஐரோப்பா, அமெரிக்காவில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டன. ஆபிரிக்காவில் நடைபெறவிருக்கும் ஓவியக்கண் காட்சியில் இச்சிறுவனின் ஓவியங்கள் வைக்கப்படவிருக்கின்றன. இக்கண்காட்சியை கானா அதிபர் என்குருமா திறந்து வைப்பார்.

"அணு ஆயுத உற்பத்தியில்

# அமெரிக்காவுடன் சீனு போட்டியிடவே முடியாது"

## பீகிங் ஆட்சியாளர் மீது கோமுல்கா கண்டனம்

வார்ஸா, ஜூன் 19

அணுசக்தி ஆயுதங்களை உற்பத்திசெய்ய சீனு கொண்டுள்ள ஆசைகுறித்து போலந்து கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கோமுல்கா எள்ளிநகையாடினார்.

சீனு பல வருடங்களுக்குப் பெரு முயற்சிசெய்தாலும்கூட அமெரிக்காவிடமுள்ள அணு ஆயுதங்களில் நூறில் ஒரு பங்கைத்தான் உற்பத்திசெய்ய முடியும் என அவர் கூறினார்.

"சீனு தனக்கு ஒன்றும், ரஷ்யாவுக்கு ஒன்றுமாக இரண்டு அளவுகோல்களை வைத்திருக்கிறது. உலக கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் பிளவு உண்டாக்க சீனு முயற்சிசெய்கிறது. சீனு இப்போது பின்பற்றும் வழியை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் ஏற்றுக்கொள்ளவே செய்யாது. ஏனெனில் அவ்வழி குறுகிய தேசியத்தை அடிப்படையாகக் கொண்டது. தான் ஒரு வல்லரசு என்ற மமதையுடன் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டகொள்கைகளிலிருந்து அது மாறிச்செல்கிறது.

ஒரு உலக வல்லரசின் அந்தஸ்தை திங்கள்நாடு அடைய வேண்டும் என்று சீனத் தலைவர்கள் முயற்சிசெய்கிறார்கள். அணுசக்தி ஆயுதங்கள் உற்பத்திசெய்ய சீனுவுக்கு ரஷ்யா உதவிசெய்யும் என்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை மாஸ்கோ ஒப்பந்தத்தால் சிதறுண்டு போய்விட்டது.

ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து ஒரு பொதுவான வழயை வகுக்கும் நோக்கத்துடன், சீனக் கம்யூனிஸ்ட்கட்சி தனது சகோதரக் கட்சிகளுடன் சச்சரவை ஆரம்பிக்கவில்லை. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பிளவை உண்டாக்குவதே சீனுவின் நோக்கம்" என்றும் கோமுல்கா கூறினார்.

சீனு, ரஷ்யா சித்தாந்தச் சண்டைபற்றி விவாதிக்க உலக கம்யூனிஸ்ட் மகாநாடொன்றைக் கூட்டலாம்.

"இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய முக்கியமான பிராந்தியங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் மகாநாட்டை சீக்கிரத்தில் கூட்டலாம்.

பூர்வாங்கவேலைகளை எப்போது ஆரம்பிக்கவேண்டும், மகாநாடு எத்தனைநாள் நடக்க வேண்டும் என்பதெல்லாம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருப்பத்தை மட்டும் பொறுத்ததாக இருக்க முடியாது" என்றும் கோமுல்கா கூறினார்.

# அம்புலன்ஸ் கிடைக்காததால் இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அவசர நோயாளரைக் கொண்டு செல்லவேண்டிய மோட்டார் வாகனம் ரயர், ரியூப் இன்றி கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் ஸ்தம்பித நிலையில் மூன்று மாத காலம் வைத்திருந்ததால் இருபது வயதான இளம் பெண் மரணமாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்விதம் அரசாங்கம் பராமுகமதக இருந்ததால் இம் மரணம் ஏற்பட்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு ஒரு பாடமாக அமையவேண்டும். வசதிகளற்ற கிளிநொச்சியில் அத்தியாவசிய சேவைக்குரிய ஒரு அம்புலன்ஸ் வாகனம் தேவைப்பட்ட நேரத்திற்குக் கிடைத்திருந்தால் அப்பெண்ணுக்கு இவ்வித முடிவு ஏற்பட நியாயமில்லை. வசதிகளற்ற கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டு போயிருந்தால் தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டு அவருடைய உயிர் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் கிளிநொச்சிக் குடியேற்றக்காரரும் நெடுந்தீவு வாசியுமான பசுபதி பெண் இராசம்மா என்பவரின் பிரசவத்தில் நச்சுக்கொடி விழா திருந்தமையால் மரணமெய்தியதைத்தொடர்ந்து நடத்திய மரண விசாரணையின்போது குறிப்பிட்டார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் அப்போதிக்கரி திரு. எஸ். அருளானந்தம் சாட்சியமளித்த போது குறிப்பிட்டதாவது:-

காலஞ்சென்ற பெண் இராசம்மாவை நானே ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அவர் பிரசவித்தபின் நச்சுக்கொடி விழாததினால் அங்கு அனுமதிக்கப்பட்டார். எமது ஆஸ்பத்திரி டி. எம். ஓ லீவில் சென்றிருந்ததனால் நோயாளிக்குத் தகுந்த சிகிச்சையளிக்கத் தக்கவர்கள் இருக்கவில்லை. அதனால் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு நோயாளியை அனுப்பத் தீர்மானித்தேன். அவசர தேவைக்கு உபயோகிக்கும் அம்புலன்ஸ் வாகனம் 3 மாதமாக ரயர், ரியூப் இல்லாது செலுத்த முடியாத நிலையில் உள்ளது, துரதிர்ஷ்டவசமாக வேறு வாகனங்களும் கிடைக்கவில்லை. மிகப் பிந்திய நேரத்திலேயே வாடகைக்கு ஒரு காரை அமர்த்தக்கூடியதாயிருந்தது. யாழ்ப்பாணத்திற்குப் போகும் வழியிலேயே நோயாளி காலமானார்.

இயற்கை மரணம் எய்தியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பஸ் சேவை சீர்கேடு
### மந்திரிக்கு முறைப்பாடு

சுழிபுரம், வெள்ளி

இ. போ. ச. பஸ் சேவையினால் பிரயாணிகள் படும் கஷ்டம் பற்றி போக்குவரத்து மந்திரிக்கும் மற்றும் மேல் அதிகாரிகளுக்கும் முறைப்பாடு செய்யும் வகையில் ஓர் கண்டனக் கூட்டம் வழக்கம்பரை அம்மன் கோவில் தீர்த்த மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு. அ. வைத்தியலிங்கம் பாகர் ஜே. பி. பேசுகையில் யாழ் மேற்கு டிப்போ நடாத்தும் பஸ் சேவை திருப்தியாக வில்லையென்றும் பிரயாணிகள் நேரத்துக்கு பஸ் கிடைக்காமல் மணித்தியாலக் கணக்காக காத்திருந்து ஏமாற்றம் அடைய வேண்டியவர்களாக இருக்கிறது என்றும், அரை மணித்தியாலத்துக்கு ஒன்றாக சேவை செய்த பஸ்வண்டிகள் இரண்டு மணித்தியாலத்துக்கு ஒன்று தானும் சேவையாற்ற முடியாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமென்றும் கூறினர்.

போக்குவரத்து சம்பந்தமான சீர்கேட்டை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மந்திரியை வேண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இத் தீர்மானம் அனுப்பிவைக்கப் பட்டது.

## நேருவுக்கு அஞ்சலி

சுழிபுரம், வெள்ளி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேருவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் ஐந்து நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக வாசிகசாலை மண்டபத்தில் திரு. மு. தம்பிஐயா தலைமையில் நேருவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொல்புரம் வாசிகசாலை மண்டபத்தில் திரு. க. கனகராயர் தலைமையில் நேருவுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. நேருவின் சேவையை பலர் பாராட்டிப் பேசினர்.

## "ஒழுங்குடனும் நேர்மையுடனும் கடமையாற்றுங்கள்"
### அரசாங்க ஊழியருக்கு நிதிமந்திரி செய்தி

கொழும்பு, வெள்ளி

"அரசாங்க ஊழியர்கள் ஒழுங்குடனும் தம்மைப் பிறர் மதிக்கும்படியும் நடந்து கொள்வதன் மூலமே தமது கடமையைச் சரிவரச் செய்து ஏனையோர்க்கும் முன்மாதிரியாக விளங்க முடியும்" என்று நிதி மந்திரி திரு. என். எம். பெரேரா அரசாங்கப்பொது ஊழியர்களுக்கு அறிவித்துள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்குச் சேவை செய்பவர்கள் என்ற கோதாவில் பொதுச் சேவையாளர் நேர்மையுடன் நடந்து கொள்வது அவசியம் என திரு. பெரேரா வற்புறுத்தியுள்ளார்.

பெரேரா தமது செய்தியில் சகல பிரச்னைகளையும் சுமுகமாகவும், நேர்மையான முறையிலும் தீர்க்க வேண்டும் என்பதே தமது தலையாய ஆவல் என்றும், அங்ஙனம் செய்வதற்கு தொழிலாளர் யூனியன்களது ஒத்துழைப்பும் பரிபூரணமாகக கிடைக்குமெனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் கடமையாற்றுவதற்குக் குறுகியகால அவகாசமே உள்ளதென்ற போதிலும் நாட்டைப் பாதிக்கும் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு விடுமென யான் நம்புகிறேன் எனவும் அவர் அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அன்பின் மகத்துவம்

உடுப்பிட்டி, வெள்ளி

"அன்பினால் உலகை ஆளும் ஆண்டவனைக்கூட ஆளலாம். சமயகுரவர்களினதும் சந்தான குரவர்களினதும் வரலாறுகள் இதற்குச் சான்று பகரும். அடியார்க் கெளியனாகிய இறைவன் கல்லாலடித்தபோதும் வில்லாலடித்த போதும் விரும்பி ஏற்றுக் கொண்டவன். மனித ஆன்மாவானது திருவருளைச் சேர்ந்தாற்றான் பேரின்பம் கிடைக்கும். மனித வாழ்க்கைத் தத்துவங்கள் பற்றி வள்ளலார் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். அமைதியான வாழ்வு காண விழைபவர்களுக்கு வள்ளலார் சிறந்த வழிகாட்டியாவார்."

இவ்வாறு 'சிவஅன்பு' என்னும் பொருள்பற்றி கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தில் திரு. சிவராமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜி. எம். தவராசாவும் பேசினர்.

## பல் நோயாளர் கஷ்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதி மக்களின் பிரதான பொது ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் சமீப சில நாட்களாகப் பல்வைத்தியம் நடைபெறவில்லையென பலத்த புகார் கூறப்படுகிறது.

## 'குரோதங்களை மறந்துமாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவுக'
### ஆசிரியர்களுக்கு எம். பி. அறிவுரை

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுநாயனுர் வித்தியாசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. செல்லையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., வட்டார வித்தியாதரிசகர் திரு. சபாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. மேற்படி சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:-

"ஒரு கிராமத்தின் வளர்ச்சி அக்கிராம மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் தங்கியுள்ளது." இம்மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கி கல்விமான்களாகத் திகழச் செய்வது ஆசிரியரின் கடமை. ஆசிரியர்கள் தங்களுக்குள்ள குரோதங்களைக் களைந்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தங்களாலான சேவையைச் செய்ய வேண்டும். கண்குளிரத் தோற்றும் கட்டிடங்களும், ஆடம்பர தோற்றமும் ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமையா. ஆசிரியர்களின் விடாமுயற்சியும் அவர்களது நற்சேவையுமே மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து இவ்வித சங்கங்களை அமைத்து மாணவர்களின் கல்வி நலனுக்காகப்பாடுபட வேண்டும். இங்கு இச்சங்கம் அமைக்கப்படுவது கண்டு பெருமை கொள்கிறேன். அரசினரால் பாடசாலைக்கு வழங்கப்படும் பொருளுதவி, மற்றும் உபகரணங்கள் முதலியவற்றை இச்சங்க மூலம் பெறுவதற்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். பாடசாலைகள் புனரமைப்புச் செய்யும் விஷயத்தில் இப்பாடசாலைக்கு முதல் சலுகை அளித்துள்ளேன்.

ஒரு ஆலயத்தைக் கட்டி அதைப் போற்றிக் காப்பதை விட, ஒரு பாடசாலையைக் கட்டி மாணவர்களுக்குத் தரமான கல்வி ஊட்டுவதே சிறந்த பணி."

பாடசாலைப் பிள்ளைகளின் நடனம், பாட்டு முதலியன இடம் பெற்றன. உத்தியோகத்தர்கள் வபரம் வருமாறு:-

தலைவர்: திரு. செல்லையா, உபதலைவர்: அ. அரியரத்தினம், காரியதரிசி: ந. நடேசர் பொருளாளர்: அ. த. நவரத்தினம், டாக்டர் அ. க. குமாரசாமி முன்னுரை நிகழ்த்தினர்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Walt Disney's
THE ABSENT - MINDED PROFESSOR

மகத்தான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)
ஸ்ரீ நேஷ்னு (திருமலை) வெம்பிலி (கண்டி) சீதா (பலறங்கொட) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி நடிக்கும்



நானும் ஒரு பெண்

ஜுன் மீ 26-ந் திகதி முதல்
கெப்பிட்டல் - பிளாஸா
மற்றும் சுவிபார திரைகளில்

கொஞ்சும் குமரி

"ராதா மின்சார மருந்து"



ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய உன்னதமான ஔஷதம் 'ராதா மின்சார மருந்து'. பாவித்த உடனே நோய்களைத் தாக்கி குணங் கொடுக்க வல்லது 'ராதா மின்சார மருந்து'. குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் ஈறாக எவரும் பாவிக்கத் தக்கது 'ராதா மின்சார மருந்து.' வீட்டில் இருக்கும் சிறந்த வைத்தியனுக்கு ஒப்பாக உள்ள ஒரேயொரு மருந்து 'ராதா மின்சார மருந்து.' ஏனெனில் திடீரெனத்தோன்றி உபத்திரவம் கொடுக்கும் காதுக் குத்து, வயிற்றுக்குத்து, பல்வலி, இடுப்புவலி, தடிமல், ஜலதோஷம், தலையிடி, கைகால் உளைச்சல், பிடிப்புகள் முதலிய எண்ணிறந்த நோய்கள் "ராதா மின்சார மருந்தை"ப் பாவித்தவுடன் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

உற்ற நண்பனைப் போல உடனுக்குடன் உதவி செய்யும் 'ராதா மின்சார மருந்து' எங்களிடம் இருக்கின்றது. சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். குரோஸ் கணக்கில் வாங்குவோருக்கு விசேஷ கமிஷன் கொடுக்கப்படும்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச்சரக்கு, வாசனைத் திரவிய வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு — 11.

# வானொலி நிகழ்ச்சிகள்

## சனி 20-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசித்தாந்த சிந்தனை: ஏ. கந்தையா, 7-15 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்ரகானம், 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-45 இந்தவாரம், 7-00 பாட்டு-மணிபாகவதர், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு- 'மேகசந்தேசம்'- எஸ். நாராயணசாமி, 9-30 வயலின்- ஜே. பி. ஜேசுதாசன், 10-00 நேயர் விருப்பம்.

## ஞாயிறு 21-6-64

காலை 6-45 காலைக்கதிர், 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, வண. ராஜப்பு லோப்பு, 7-15 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி (மறு ஒலிபரப்பு), 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 சித்திரகானம்.

பகல் 11-30 சிறுவர்மலர், 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு- கே. வி. தம்பு, 5-45 திரை ஒலி, 6-10 இடைவேளை சங்கீதம், 6-15 கிளாரினெற்- இ. சுப்பையா, 6-45 பாட்டு-நேசம்மா அலெக்சாண்டர், 7-30 நாடகம்-தாய்பாசம், 8-15 மாணவர்மன்றம், 8-30 நேயர்விருப்பம், 9-15 மாதர்கேட்டவை, 9-45 தேர்ந்தஇசை, 10-00 நிலைய ஒலிப்பதிவு.

---

கொழும்பு, வெள்ளி

செனட் சபைத் தலைவர் திரு. தோமஸ் அமரசூரியாவின் மைத்துனரான திரு. குனோட் பெர்னாண்டோவின் கொலை சம்பந்தமாக ஒருபெண் உட்பட நால்வர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கபபட்டுள்ளனர்.

---

மட்டக்களப்பு மாவட்டம்

# மத்திய மகா வித்தியாலய போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, வெள்ளி

வித்தியா பகுதியின் ஆதரவில் மட்டக்களப்பு மாவட்ட, மகாவித்தியாலங்கள், மத்திய மகாவித்தியாலயங்களுக் கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில், சாம்பியன்களாக வெற்றியீட்டியவர்களின் விபரங்கள் வருமாறு.-

இவர்கள் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறும் அகில இலங்கைப் போட்டிகளில் கலந்துகொள்வார்கள்.

### ஆண்கள்

100 மீட்டர்: எம். இஸ்மாயில், எம். எம். முகைதீன்,

200 மீட்டர்: எம். இஸ்மாயில், எச். எம். முகைதீன்.

400 மீட்டர்: எம். நல்லரத்தினம், எம். முகைதீன்.

800 மீட்டர்: வி. நவநாயகம், ரி. மயில்வாகனம்.

1500 மீட்டர்: வி. நவநாயகம் யு. எம். கக்கீம்.

உயரப்பாய்தல்: வி. நவநாயகம், எஸ் பி. சிறிதரன்.

நீளப்பாய்தல்: ஐ. மீரா முகைதீன், எம். இஸ்மாயில்.

குண்டெறிதல்: எம். முத்துலிங்கம், அப்துல்லத்தீப்.

### கனிஷ்ட பிரிவு

குண்டெறிதல்: சி.நந்தகுமார், என். கனகரத்தினம்.

உயரப்பாய்தல்: சி. நந்தகுமார், அப்துல் வஹாப்.

நீளப்பாய்தல்: எம். எம். அலாகுதீன், சி. நந்தகுமார்.

100 மீட்டர்: எம். ஏ.வஹாப், எம். ஆதம்லெப்பை.

### பெண்கள்

75 மீட்டர்: இ. புவிநாயகி, ரி. தவமலர்.

100 மீட்டர்: இ. புவிநாயகி, ரி. சரோஜினி.

200 மீட்டர்: ரி. சரோஜினி, இ. புவிநாயகி.

### கனிஷ்ட பிரிவு

75 மீட்டர்: இசபெல் மத்தியூஸ், ரி. பொன்னம்மா.

100 மீட்டர்: இசபெல் மத்தியூஸ், கே. காயத்திரி.

200: மீட்டர்: இசபெல்மத்தியூஸ், கே. காயத்திரி.

# தெற்கில் புயல், மழை

கொழும்பு, வெள்ளி

கடந்த புதன் கிழமை வீசிய 45 மைல் வேக புயலினால் தென்மாகாணத்தில் பல வீடுகள் சேதமடைந்தன. தந்திக் கம்பங்கள் வீழ்ந்ததினாலும் கம்பின் மீது மரங்கள் வீழ்ந்ததினாலும் டெலிபோன் தொடர்புகள் பாதிக்கப்பட்டன. பல வீதிகளில் போக்குவரத்துகள் தடைப்பட்டன. மாத்தறையில் தொடர்ந்து பெய்யும் மழையினாலும், புயல் வீசுவதாலும் இங்கு வெள்ளம் ஏற்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

---

# திருப்பணி நிதிக்கு நாளை நாடகம்

யாழ்ப்பாணம், சனி

உரும்பராய சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிற்கொட்டகைத் திருப்பணி நிதிக்காக கொழும்பு ராஜ் நாடக மன்றத்தாரின 'அவமானம்' என்ற நாடகம் நாளை மாலை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---


## வரி விளம்பரம்

### வாடகைக்கு

தங்க வில்லா என்று பெயரிடப் பட்ட ஒரு பெரிய வீடு; இரு படுக்கை அறை, இரு சாமான் அறை, ஆபீஸ், குளியல், வேலையாள், வாகன அறைகள், ஜலமூடி மலகூடம், மின்சார வசதி, மா, தென்னை, கமுகு முதலிய பிரயோசனங்களுடன், நல்லூர் கந்தசாமி கோயிலிலிருந்து 1 1/2 மைல ளவில் கள்ளியங்காட்டருகே, யாழ்ப்பாண — பருத்தித்துறை பிரதான றோட்டில்இருக்கிறது. விரும்புவோர் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, வீரகேசரி பிரதிநிதி, திருக்கோணமலை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 525

### அறிவித்தல்!

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூர் ஆட்சி பதியப்பட்ட ஒப்பந்தகாரர் சங்கம் அங்குரார்ப்பணக்கூட்டம் 23-6-64 பிற்பகல் 4 மணிக்கு கொடிகாமம்-கச்சாய் வீதி இராசதோட்டத்தில் நடைபெறும். தயவு செய்து சமுகமளிக்கவும். C. M. S. நாதன், ப. உ. ஒப்பந்தகாரன், "இராச தோட்டம்," கொடிகாமம், 18-6-1964. 607

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம், தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### தேவை

தேசிய சுவீப் விற்பதற்கு கிராமந்தோறும் ஆள் தேவை. 3 சத வீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்புபிளான் ஜுவலறிகவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461
493

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம. மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு [illegible] நாள் மருந்து 10/50 [illegible] பரிபூரணானந்தர் [illegible] கோவ[illegible]டி [illegible] பாணம்.




# 40 தினங்கள் மூர்ச்சையற்று கிடந்த ஆந்திர மந்திரி

## நேற்று மூர்ச்சை தெளிந்தார்

சண்டிகார், ஜூன் 19

கார் விபத்தினால் காயமுற்று, 40 தினங்களாக பிரக்ஞையிழந்து ஆஸ்பத்திரியில் இருந்த ஆந்திரக் கல்வி மந்திரி திரு. பி. வீ. ஜி. ராஜூ இன்று மூர்ச்சை தெளிந்தார்.

கடந்த மாதம் 11ம் திகதி கார் விபத்து காரணமாக அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அன்று முதல் மூர்ச்சையற்ற நிலையில் அவர் சண்டிகார் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார். சுமார் 40 தினங்கள் மூர்ச்சையற்றிருந்த ஆந்திர மந்திரி இன்று மூர்ச்சை தெளிந்ததாக அறிவிக்கப்பட்டது.

# "சதியின் அடுத்தகட்டம் சிறையை உடைப்பதே"

## திஸநாயக்கா தம்மிடம் கூறியதாக மேஜர் ஜெனரல் விஜயக்கூன் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

"காப்டன் ஜயக்கொடி, காப்டன் விரசிங்கா ஆகியவர்கள் குறித்து கேர்ணல் ஆட்டிகல எனக்கு சில விஷயங்கள் சொன்னார். வேறு மூன்று அதிகாரிகளுடன் திரு. எஸ். ஏ. திஸநாயக்கா சிறைக்குள் செல்லும் பொழுது, சிறையை உடைப்பதுதான் புரட்சியின் இரண்டாவது கட்டமாகவிருக்கும் என்று என்னிடம் அப்பொழுது தெரிவித்துள்ளார்."

புரட்சி சதி வழக்கு நேற்றுக் காலை 9-15-க்கு நீதியரசர்கள் திரு. சன்ஸோனி, திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ, திரு. எல். பி. டி சில்வா ஆகியோர் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது முன்னாள் இராணுவ தளபதியும் தற்பொழுது பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராகவிருக்கும் மேஜர் ஜெனரல் விஜயக்கூன் சாட்சியமளிக்கையில்தான் மேற்கண்டவாறு கூறினார். குறுக்கு விசாரணையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனவரி மாதம் 27-ம் திகதி இராணுவம் எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராகவிருந்தது. பொதுவேலைநிறுத்தம் நடைபெறுமென்ற எச்சரிக்கையைச் சமாளிக்கவும் இராணுவம் தயாராகவிருந்தது. ஜனவரி மாதம் 12-ம் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் நான் எனது சக அதிகாரிகளிடம் பார்லிமெண்டில் விடுக்கப்பட்ட அறிக்கைகள் குறித்தும் விண்பேச்சுக்கள் பற்றியும் குறிப்பிட்டேன். எதை எப்பொழுது பேசவேண்டுமென்பதில் மிகவும் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அரசாங்கத்துடன் இராணுவம் தலையிடுவதென்பது நடைபெறாத ஒன்று என்றும் நான் அவர்களிடம் தெரிவித்தேன்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடன் நான் தொடர்பு கொண்டுள்ளேன் என்பது எனது சக அதிகாரிகளுக்கும் தெரியும். கேர்ணல் டி சேரமோ அல்லது கேர்ணல் டி மெல்லோ என்னிடம் ஒரு விஷயத்தை தெரிவித்திருந்தார்கள். அரசாங்கத்தை திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கைப்பற்றுவது உண்மை என்று என்னிடம் அவர்கள் தெரிவித்தனர்."

கேள்வி: இப்படியான குற்றச் சாட்டு இருக்கிறது என்பது குறித்து பீலிக்ஸிடம் நீர் எதுவும் சொன்னீரா?

பதில்: இந்தக் குற்றச்சாட்டு உண்மையல்ல என்று நான் கருதினேன். ஆனால் அவரை நான் சந்தித்திருந்தால் அது பற்றி அவருடம் சொல்லியிருப்பேன்.

கேள்வி: உம்முடன் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கொண்டுள்ள தொடர்பு குறித்து கேர்ணல் டி சேரம் அறிந்திருக்கவேண்டும் என்பதை நீர் உணர்ந்திருக்கவில்லையா?

பதில்: இதற்குப் பதிலளிப்பது மிகவும் கஷ்டம்.

கேள்வி: மூன்று பொலிஸ் அதிகாரிகள், புரட்சி சதியொன்றை நடத்தத் திட்டமிட்டுவருகிறார்கள் என்று எஸ். ஏ. திஸநாயக்கா கூறியதை நீர் அறிந்திருந்தீர் என்பது சரியா?

பதில்: இது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை.

கேள்வி: திரு. திஸநாயக்காவை மட்டும் சிறைக்கு கொண்டுசெல்லுகையில் திருவாளர்கள் ஜோன்பிள்ளை. சேனநாயக்கா ஆகியோர் ஏன் அலரி மாளிகைக்கு கொண்டுவரப்படவேண்டுமென்பது உமக்குத் தெரிமா?

பதில்: எனக்குத் தெரியாது.

# புதிய பஸ்களை வாங்கவேண்டாம்

## மந்திரி உத்தரவு

கொழும்பு, வெள்ளி

புதிய பஸ்கள் வாங்குவதை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை போக்குவரத்து சபைத் தலைவரை தகவல் மந்திரி திரு. அனில் முனசிங்கா கேட்டுள்ளார். ஆனால் லண்டனிலுள்ள கம்பெனிகளுக்கு ஏற்கனவே ஆடர் செய்யப்பட்ட இரட்டை தட்டு பஸ்கள் இலங்கைக்கு வரவழைக்கப்படும்.

இ.போ. சபைத் தலைவர் திரு. ஜே. எல். ஈ. பெர்னாண்டோவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் சகல நியமனங்களையும் தற்காலிகமாக நிறுத்தும்படியும் இ. போ. சபைக்கு மோட்டார் வாகனங்கள் வாங்குவதையும் தற்காலிகமாக நிறுத்தும்படியும் மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

# பூரணை தினத்தில் கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பூரணை தினங்களில் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் கலைநிகழ்ச்சிகளை நடத்துவதென்ற யாழ்ப்பாண மேயரின் திட்டப்படி இம்மாதம் 24-ம் திகதி இன்னிசைக் கச்சேரியும் நாடகமும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் திருமதி சரஸ்வதி பாக்கியராசா இன்னிசை விருந்தளிப்பார்.

பரஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினரின் 'கண்டி அரசன்' என்னும் நாடகமும் நடைபெறும்.

# நேபாள மன்னர்

புதுடில்லி, ஜூன் 19

இந்தியா வந்திருந்த நேபாள மன்னர் மகேந்திராவும், மகாராணியும் இன்று நேபாளம் புறப்பட்டனர்.

# இன்று

மாலை 5-30 மணிக்கு யாழ். நகரமண்டபத்தில் நேருஜி மறைவுக்கு அனுதாபக்கூட்டம். திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு. வி சுந்தரலிங்கம், திரு எம் சிவசிதம்பரம் ஆகியோரும் மற்றும் பலரும் உரை நிகழ்த்துவர்.

⁂ ⁂ ⁂

காலை 9 மணி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் விஞ்ஞானிகந்தையா சொற்பொழிவு.

⁂ ⁂ ⁂

மாலை 6 மணி வண்ணை வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோவிலில் 'மகாபாரத'படிப்பு ஆரம்பம்.

⁂ ⁂ ⁂

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 11-ம் திருவிழா விசேஷ அபிஷேக ஆராதனையும் மகாராஜபுரம் ஸ்ரீ சந்தானம், செல்வி ஜகதாம்பிகை பரமநாதன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

# மறைந்த குரவருக்கு அஞ்சலி

உடுப்பிட்டி, வெள்ளி

"உண்மையான கத்தோலிக்கப் பாதையில் பல்லாயிரக் கணக்கான மக்களை வழிநடத்திச் சென்ற மனிதகுல மாணிக்கமான வண. பிதா கில்லறியின் மறைவு மனித சமூகத்திற்கு பெரும் இழப்பாகும்."

இவ்வாறு கடந்த வாரம் யாழ்ப்பாண மேற்றிராணியார் மாளிகையில் மரணமான வண பிதா கில்லறிக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக வதிரி அர்ச். அந்தோனியார் ஆலய மண்டபத்தில் கரவெட்டி கென்னடி கத்தோலிக்க கழகத்தாரால் நடாத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. ஜீ. ஏ. செல்வநாயகம் பேசுகையில் கூறினார்.

# சுகாதார விழா போட்டி முடிவுகள்

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு கோவிற்பற்று சுகாதாரவிழா போட்டி முடிவுகள் வருமாறு:-

தனிப் பாடல்: வே. விஜயலட்சுமி, சிறுவிளான் கனகசபை வித்தியாசாலை; செ. தேவநாயகி, இளவாலை, தி. கன்னியார்மடம்.

உயர்தரப் பிரிவு: சிதம்பரேஸ்வரி சுப்பிரமணியம்.

கூட்டுப்பாடல் கீழ்ப்பிரிவு:- சிறுவிளான் கனகசபை வித்தியாசாலை, ஜசிந்தா தமிழ்க் கலவன் பாடசாலை.

உயர் பிரிவு: பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை, இளவாலை தி. கன்னியார்மடம்.

நடனம்: சில்லாலை, ஜே. க. த. க. பாடசாலை.

நாடகம்: அர்ச். என்றியர்சர் கல்லூரி, இளவாலை; ஜே. க. த. க. பாடசாலை, இளவாலை.

பேச்சுப் போட்டி உயர்தர பிரிவு: என். சௌந்தரநாயகம், சென். யோஜப்ஸ்,மாதகல்; வி. செல்வராசா, சிறுவிளான், கனகசபை வித்தியாசாலை.

பெண்கள்: தவமணி நவரத்தினம், பண்டத்தரிப்பு, மகளிர் உயர்தர பாடசாலை; சிவலோகநாயகி சிவபாதசுந்தரம், பண்டத்தரிப்பு, மகளிர் உயர்தர பாடசாலை.

கீழ்ப்பிரிவு: ஆ. மரியதாஸ் சிங்கம். ஜே. க. ஆண்கள் பாடசாலை, சில்லாலை.

பெண்கள்: உமாராணி இரத்தினக்குருக்கள், பண்டத்தரிப்பு மகளிர உயர்தர பாடசாலை; கமலாதேவி சின்னையா, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.

# கி. ச. தேர்தல்

நல்லூர், சனி

மயிலிட்டி கிராமசபைத் தேர்தல் திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது. சபையின் 18 வட்டாரங்களிலும் என்றுமில்லாதவகையில் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது.

# அரிசி ஆலை யந்திரத்தில் அகப்பட்டு பெண் மரணமானார்

யாழ்ப்பாணம், சனி

நுணாவிலைச் சேர்ந்த அரிசி குத்தும் ஆலையின் சொந்தக்காரரான மகாலிங்கத்தின் மனைவி அன்னம்மாவின் சேலை ஆலையின் யந்திர நாடாவில் அகப்பட்டு சுழற்றப்பட்டதால் உடம்பெங்கிலும் படுகாயப்பட்டும் மண்டை உடைந்தும் மூளை சிதறப்பட்டும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இம்மரணம் பற்றி மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் கணவர் சம்பவம் நடந்த தினம் வெளியே சென்றிருந்ததாயும் மனைவி அன்னம்மா ஆலையின் வேலையை மேற்பார்வை செய்துகொண்டிருக்கும் சமயமே சேலை யந்திரத்தின் நாடாவில் அகப்பட்டு இச்சம்பவம் நடைபெற்றதென விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# வீடமைப்புப்புக்கு ஒரு கூட்டுத்தாபனம் அமைக்க அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

வீடமைப்பு சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு கூட்டுத்தாபனத்தை நிறுவ வீடமைப்பு மந்திரி திரு. எம். பி. டி. இஸட் சிறிவர்த்தன தீர்மானித்துள்ளார். இந்தக் கூட்டுத்தாபனம வீடமைபபு இலாகாவில் சேர்த்துக்கொள்ளப்படக்கூடாதென்றும், சுதந்திரமாக இயங்க வேண்டுமென்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டுத்தாபனம் 49-51 பங்குவீத அடிப்படையில் இயங்கும்.

சரியாக 9 மணிக்குத் தமது காரியாலயத்துக்குத் தவறாது வந்துவிடும் வீடமைப்பு மந்திரி, தான் பேசுவதைவிடச் செயலிலேயே அதிக நம்பிக்கை உள்ளவரென்றும் விரைவில் தமது திட்டம் அமுலாகுமெனவும் தெரிவித்தார்.

# காங்கேசன்துறையில் கைகலப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

நேற்றிரவு காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் ரோந்து சுற்றி வருகையில் காங்கேசன் துறையைச் சேர்ந்த தையிட்டியில் அவ்வூரைச் சேர்ந்த ஐவர் வீதியில் மதுபோதையில் தமக்குள் தாக்கப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் அவர்களைக் கலைந்து செல்லுமாறு மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கூறியபோது திடீரென ஐவரும் பொலிசாரைத் தாக்கியதாகவும் பொலிசாரும் பதிலுக்குத் தாக்கியதாகவும் இக்கைகலப்பில் பொலிசார் குண்டாந்தடியும் மற்றவர்கள் பொல்லுகளும் உபயோகித்ததால் இரு பகுதியினரிலுள்ளவர்களுக்கும் காயமேற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அபயதீரா என்பவர் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைகலப்பில் கலந்துகொண்டதாகக் கூறப்படும் ஐவருள் ஒருவரான மரியதாஸ் என்பவருக்குத் தலையில் காயமேற்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் பொலிஸ் பாதுகாப்பிருக்கிறார். மற்ற நால்வரும் தப்பிச்சென்றுவிட்டதால் பொலிஸார் அவர்களைத் தேடி வருகின்றனர்.

# குளிக்கச் சென்றவர் குளத்தில் மரணமானார்

யாழ்ப்பாணம், சனி

செல்லப்பா இராமச்சந்திரன் என்ற 87 வயது நிரம்பிய வயோதிபர் நாச்சிமார் கோவில் குளத்தில் குளிக்க இறங்கியபோது நீரில் மூழ்கி காலமானார். வண்ணார்பண்ணையைச்சேர்ந்த திரு இராமச்சந்திரன் நீரில் தத்தளித்துக் கொண்டிருக்கும்பொழுது திரு. செ. சோமசுந்தரம் என்பவர் உதவிக்குப் போனார். ஆனால் அவருடைய உயிரைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# நேருஜியின் சரித்திரம்

சென்னை, ஜூன் 19

நேருஜியின் வாழ்க்கை வரலாற்றை நடிகர் குலதெய்வம் ராஜகோபால் வில்லுப்பாட்டாக உருவாக்கிப் பல இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார்.

நேருஜி பிறந்து, வளர்ந்து, இந்தியச் சுதந்திரப் போரில் ஈடுபட்டு அரும்பெரும் தியாகங்கள் செய்தது, பாரதப் பிரதமராகப் பதவியேற்றது, சீன எதிர்ப்பின்போது அவர் கடைப்பிடித்த ராஜதந்திரம் முதலியவற்றை வில்லுப்பாட்டு மூலம் நடிகர் சுவைபடக் கூறுகிறார்.

# நேருஜியின் புகைப்பட கண்காட்சி

புதுடில்லி, ஜூன் 19

நியுயோர்க்கில் நடைபெற்று வரும் உலக பொருட்காட்சியில் நேருஜியின் படங்கள் மூலம் அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் கண்காட்சி ஒன்று எதிர் வரும் செப்டம்பரில் இடம்பெறும். நேருஜியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படமும் காண்பிக்கப்படும். அவரது நூல்களும் காட்சியில் இடம்பெறும்.

# கல்லூரி விளையாட்டு போட்டி

சுன்னாகம், சனி

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பி. ப. 3 மணிக்கு யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராஜா தலைமையில் நடைபெறவிருக்கிறது.


**யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

இளைப்பாறிய உதவி-அதிபர் திரு. எல். எஸ். குலதுங்கம் அவர்களுக்கும் திருமதி குலதுங்கத்திற்கும் ஜூன் மாதம் 24-ந் திகதி (24-6-64) யாழ்ப்பாணக் கல்லூரிக் கட்டடத்தில் பிரியாவிடைக் கூட்டம் நடைபெறும்.

தேநீர் விருந்து — பி. ப. 5-00

பொதுக்கூட்டம் — பி. ப. 6-00

பழைய மாணவர்கள் எல்லோரும் இவ்வைபவத்துக்கு சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும். அவைகள் தனாதிகாரி, யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

603 கௌரவ காரியதரிசி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.